பெருமாட்டுநல்லூர் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.சா.பாபு

ந.க.எண். 25(5) / 2019 / பெ

நாள் - 21.10.2019

பொருள் குடியிருப்பு மனைப்பிரிவு - காஞ்சிபுரம் மாவட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - பெருமாட்டுநல்லூர் ஊராட்சி , பாண்டூர் கிராமம் சர்வே எண் - 119 / 1A மொத்த மனைகள் - 47 , மனையின் பரப்பு - 0.82.0 ஹெக்டேர் ( அ ) 88232 ச.அடி பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக

பார்வை
1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) , செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் - 3588 / 19 (செம-3) நாள் - 14.10.2019
2) அரசாணை (நிலை ) எண் - 71 , ஊரக வளர்ச்சித் துறை நாள் - 16.06.2003
3) அரசாணை (நிலை ) எண் - 138 , வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் - 04.06.2004
4) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ( ZONE - II ) அவர்களின் ஆய்வறிக்கை நாள் - 18.10.2019
5) தொடர்புடைய ஆவணங்கள்

*********

**உத்தரவு**

பார்வை I-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் - 3588 / 19 / செம3 நாள் - 14.10.2019 - ன் படி காஞ்சிபுரம் மாவட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - பெருமாட்டுநல்லூர் ஊராட்சி , பாண்டூர் கிராமம் சர்வே எண் - 119 / 1A மொத்த மனைகள் - 47 , மனையின் பரப்பு - 0.82.0 ஹெக்டேர் ( அ ) 88232 ச.அடி பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ. / ந.ஊ.து.இ. ( செ.ம.) எண் - 424 / 2019 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்ட மேற்படி மனைப்பிரிவினை இவ்வலுவலக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆய்வு செய்து 18.10.2019 அன்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார் அதனை ஏற்று கட்டணம் பெருமாட்டுநல்லூர் ஊராட்சி மன்றத்தில் செலுத்தப்பட்டத்தின் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு மவ / தனி அலுவலர் (செமு) எண் - 2 / 2019 - 2020 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

பார்வையில் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட கட்டிட மற்றும் மனைப்பிரிவு விதிகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ / ந.ஊ.து.இ (செம) எண் - 424 / 2019 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணமிக்கப்படும் மட்டத்திற்கும் அகலததிற்கும் அமைகக்பபட வேண்டும். அதோடு தகுந்த சிறு பாலங்கள், சாக்கடை, வடிகால், துப்புரவு தெரு விளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2) தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3) அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது, கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.



Scanned by CamScanner

4) அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து எந்த கட்டிடமோ சுவரோ மேற்படாது சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.

6) மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு மல அறை, எருகுழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்று குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றின் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7) மனையின் பரப்பில் 50 சதவீதத்திற்கு மேற் கட்டிடம் கட்டக்கூடாது.

8) நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் ( கிரையப்பத்திரம் , குத்தகை பத்திரம் , பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல ) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

9) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

10) கடக்கால் போட தேவையான அளவிற்கு அதிகமான தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள் கழனி ஏற்படுத்தக் கூடாது.

11) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுதிட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

12) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் ( ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் ( அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.

13) தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6"0 X 4"0 என்ற அளவுக்கு குறையாமல் காங்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

14) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

15) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் அனைத்தும் முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

இணைப்பு - மனைப்பிரிவு வரைபடம்.

21/10/9

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
பெருமாட்டுநல்லூர் ஊராட்சி.

பெறுநர்
திரு.ஆர்.ஜெயசங்கர் த/பெ ராமய்யா,
எண். 131/E , பெருமாள் கோயில் தெரு,
ஆலப்பாக்கம் ,
சென்னை - 600 016

2/10

நகல் - மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் , மண்டலம் - II

g:\layout - files\layout\layout - pmnr - jeyasankar.docx

Scanned by CamScanner

# தீர்மான நகல்

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பெருமாட்டுநல்லூர் ஊராட்சியில் 10/09/2019 தேதியன்று செவ்வாய் முற்பகல் 11.00 மணிக்கு தனி அலுவலர் திரு.சா.பாபு அவர்கள் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

| வ. எண் | பொருள் - | தீர்மானம் - |
|---|---|---|
| 1. | பெருமாட்டுநல்லூர் ஊராட்சியில் அடங்கிய பாண்டூர் கிராமத்தில் சர்வே எண்கள் - 119 / 1A - ல் பரப்பு - 0.82.0 ஹெக்டேர் பரப்பு மனைமிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரிக்க ஒப்புதல் கோருதல் (மற்றும்) மூலை & முடுக்கு , சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடு இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யவும்<br>திரு.சு.ஜெயசங்கர் த / பெ .ராமய்யா, எண். 131 / E, பெருமாள் கோயில் தெரு, ஆலப்பாக்கம் , சென்னை – 600 016<br>மேற்படி நபரின் மனுவை பரிசீலனை செய்ய மன்றம் ஒப்புதல் கோருதல் | சென்னை - 600 016 , ஆலப்பாக்கம் , எண். 131 / E, பெருமாள் கோயில் தெரு, திரு.சு.ஜெயசங்கர் த / பெ .ராமய்யா என்பவரின் கோரிக்கை மனுவின்படி பெருமாட்டுநல்லூர் ஊராட்சியில் அடங்கிய பாண்டூர் கிராமத்தில் சர்வே எண்கள் - 119 / 1A - ல் பரப்பு - 0.82.0 ஹெக்டேர் பரப்பு மனைமிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரிக்க ஒப்புதல் கோருதல் (மற்றும்) மூலை & முடுக்கு , சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடு இடத்தினை ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்கவும் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண். 3588 / 19 / செ.ம.3 நாள் - 05.07.2019 - ன்படி சாலைகள் பெருமாட்டுநல்லூர் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

// உண்மை நகல் //

S. Babu 10/9/19

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பெருமாட்டுநல்லூர் ஊராட்சி,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

10/09/19

Scanned by CamScanner